<u>செய்தி வெளியீடு எண்.377</u> <u>நாள்.23.5.2008</u>

# நலத்திட்ட உதவிகள் பெறுவதற்கான வருமான உச்ச வரம்பு

# ரூ. 24,000 ஆக உயர்வு

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமணத் திட்டம், ஈ.வே.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் பெண் குழந்தைகள் திருமண உதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களின் திருமண நிதியுதவி திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் ஏழைப் பெண்களின் திருமணத்திற்காக நிதியுதவி பெறுவதற்கும், சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே உள்ள குடும்பங்கள் நிதியுதவி பெறுவதற்கும் குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் 12,000 என்ற அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும், குடும்பத்தின் வருவாய் ஈட்டும் நபர் இறந்துவிட்டால் துயர் துடைப்பு நிதியுதவி பெறுவதற்காக ரூபாய் 7200 என்ற வருமான உச்ச வரம்பு உள்ளது.

இந்த வருமான உச்சவரம்பு மிகக் குறைவாக உள்ளது என்ற அடிப்படையில், இந்த வருமான உச்சவரம்பை உயர்த்த வேண்டுமென மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் விடியல் எஸ். சேகர், கோவை தங்கம், ராணி வெங்கடேசன், ஆர்.எம். பழனிசாமி, மா. தண்டபாணி, எம்.ஆர். சுந்தரம், எஸ். ஜெயபால், கே. ஜெயக்குமார், கு. ஹசன் அலி, பி.எஸ். விஜயகுமார், ராம. சுப்புராம், இராம் பிரபு, மா. இராஜசேகரன் ஆகியோர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அதிக எண்ணிக்கையில் ஏழை எளிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பயனடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று மேற்கூறிய திட்டங்களின் கீழ் நிதியுதவி பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பை ரூபாய் 24,000 ஆக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் இத்திட்டங்களின் கீழ் அதிக அளவில் ஏழை எளியோர் பயனடைவர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.